பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

Chief Secretary's Secretariat, Northern Provincial Council

பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - ஆளணியும் பயிற்சியும்

නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය – පිරිස් හා පුහුණු

Office of the Deputy Chief Secretary – Personnel and Training

68. குறொசெற் வீதி (கச்சேரி நல்லூர் வீதி) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

68, කුරොසෙට් පාර (කස්සේරි නල්ලූර් පාර) සුණ්ඩුකුලි, යාපනය

68, Crosset lane, (Kachchery Nallur Road) Chundukuli, Jaffna


NP/17/MDTU/2/09/05/2019
03.04.2019

அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப்பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்
வடக்கு மாகாணம்

## பயிற்சிகளுக்காக அலுவலர்களை தெரிவு செய்தல் - 2019

பிரதமசெயலாளரின் NP/01/01/02/02(2) இலக்க 08.02.2019ம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டதற்கமைய வடமாகாண அலுவலர்களின் இயலளவை கட்டியெழுப்புவதற்காக முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகினால் நடாத்தப்பட்டு வருகின்ற பயிற்சிகள் தொடர்பாக, உரிய பயிற்சி நெறிகளை இனங்கண்டு வகைப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு பிரதமசெயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுகளை உள்ளடக்கியதான பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு பிரதமசெயலாளரினால் 01.04.2019ம் திகதிய கடிதத்தில் வழங்கப்பட்ட அனுமதிக்கமைவாக **புதிதாக தயாரிக்கப்பட்ட பயிற்சி அட்டவணையானது** இத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்படுகின்றது. கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை கருத்தில் கொண்டு பயிற்சிகளுக்கான அலுவலர்களை தெரிவு செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. பயிற்சிக்காக அலுவலர்களை நியமிக்கும் போது அவர்களின் சேவை மற்றும் தரங்களினை கருத்தில் கொண்டு பொருத்தமான அலுவலரை பட்டியலில் சேர்த்தல்.
2. பயிற்சி நெறிகளில் இதுவரை பங்குபற்றாத உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களின் பங்குபற்றுதலை ஊக்குவித்தல்.
3. பிரிவுத் தலைவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதம முகாமைத்துவ உதவியாளர்களை பொருத்தமான பயிற்சிகளில் கலந்து கொள்வதனை உறுதி செய்தல்
4. ஒரே பயிற்சிநெறிக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்களை பிரேரிக்கும்போது பயிற்சித்தேவையின் முன்னுரிமை ஒழுங்கில் பெயர்ப்பட்டியலினை தயார் செய்தல்
5. தங்களின் நிர்வாகத்தின் கீழுள்ள அலுவலகம் மற்றும் உபஅலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்துதல்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து 18.04.2019ம் திகதிக்கு முன்பாக npmdti@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது நேரடியாக அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

T. Um

**த. உமா**
**பணிப்பாளர்**
**முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு**

T. Umah
Director
Management Development Training Unit
Northern Province

பிரதி : பிரதமசெயலாளர் - வடக்குமாகாண சபை - தகவலுக்காக


பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
e-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப்பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary
பணிப்பாளர், முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு / අධ්‍යක්ෂ, කළමනාකරණ සංවර්ධන පුහුණු ඒකකය / Director, Management Development Training Unit
Tel : 021 739 1250 (Dir)
: 021 739 1254 (Gen)
Fax : 021 221 6117
e-mail : npmdti@gmail.com